E - **ISSN: 3139 – 1893** www.boomiirjt.com Volume 2, Issue 1 Jan – Mar 2026

**BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL**

An international open access, peer- reviewed, refereed journal

# வானம்பாடிக் கவிஞர்களின் படைப்புகளில் மனிதம்
# Humanity in the work of the Vaanampati poets

**முனைவர் பெ.கி.கோவிந்தராஜ்**

கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,சேர்க்காடு, வேலூர் - 632 115, தமிழ்நாடு

**Dr. P.K. Govindaraj**

Guest Lecturer, Department of Tamil, Thiyuvalluvar University, Serkkadu, Vellore – 632 115, India, Tamilnadu

Cell: 9940918800 E. Mail: Pkgovindaraj1974@gmail.com

**Abstract**

The pen of the poets transformed into the polemic of the social lawyer. The pots, feeling heartbroken by the sight of social atrocities and miseries. That had gone unheeded until now, began to pour out their burning and burning filth. "The poets are the progressive poets who, with truth And emotion as their wings, came forward to fly in the sky of poetry in order to see the truths of the present and the glorious of the future." These were the ones who sang about humanity, portrayed Humanity, and inspired people who considered their fellow human beings Inferior, the rich poor, and the divided society. Tamil Nadu, tamilavan, tamilanban, M. Mehta, Buviyarasu, Agniputhiran, Sirpi, Thenarasan, Bala, Meera, Abdul Rahman. N. kamarasan, Jayaprakasa, Inamurugu, Gangaikondan, and other poured humanity into their emotional poetic lines.

**Key words:**

Humanity, Vanampati Poets, Works, Meera, Sirpi, N. Kamarasan, Mu. Mehta

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதநேயத்தைப் படம்பிடித்தும் உடன்வாழ் மனிதர்களை மேல்கீழ் என்றும், செல்வர் ஏழை என்றும், பகுத்த இழி சமூகத்தைச் சாடியும் மக்களுக்கு எழுச்சியூட்டியதையும். பாடும் வானம்பாடி கவிஞர்கள் தங்களின் எழுத்தக்களில் உழுபவரின் நிலைமையும், ஏழைகளின் பசி துயரத்தையும், மக்களின் வறுமையும், வறுமைகோட்டிற்கு கீழ் இருக்கும் இவர்களின் அடிமைத்தனத்தையும் சமூகக் கொடுமைகளையும் அவர்களின் துயர அவலங்களையும், அதிலிருந்து விடுதலை பெறவும், தம் கவிதைகளில் மனிதநேயத்தை வெளிகாட்டியாதை இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

குறிச் சொற்கள்: மனிதம், வானம்பாடிக் கவிஞர்கள், படைப்புகள், மீரா, சிற்பி, நா.காமராசன், மு. மேத்தா

## முன்னுரை

மனிதம் உலகத்தில் இருப்பதால்தான் இன்னும் உலகம் எழிலாகவும் வளமாகவும் இருக்கிறது. மனிதம் உடன் வாழ் மனிதன்மேல் காட்டும் அன்பையும் மனிதன் பிற உயிர்கள் பால் காட்டும் அன்பையும் மனிதம் எனும் சொல் குறிக்கும் எனலாம். மானுட நேயம், மானுடம் மனிதம் என்று மனிதத்தைக் குறிப்பிடுவார்கள். அன்புதான் மானுட வளர்ச்சியின் ஆணிவேர். எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டும் பண்பாடு தமிழகத்தில் ஆதிகாலம் தொட்டே இருந்து வருகிறது. தமிழ் உலகத்தில், யாவரும் கேளிர் என்ற நன்னெறியும் தழைத்து விளங்கியது. மனித நேயம் என்பது நாடு, இனம், மொழி என்ற எல்லைகளைக் கடந்து நிற்பது. மனித இனத்தின் நாகரிகப் பண்பாடு வளர்ச்சியோடு இணைந்து நிற்பது.
மக்கள் ஒன்றுபடுவர் உலக மக்களிடையே ஒற்றுமை ஓங்கும். கவிதை வானம் 1971 – ஆம் ஆண்டு நெருப்பு மூச்சுமிழும் வானம்பாடிப் பறவைகளின் வலசை கண்டு நெஞ்சை நிமிர்த்துக் கொண்டது.

தமிழ்நாடன், தமிழவன், தமிழன்பன், மு. மேத்தா, புவியரசு, அக்கினிபுத்திரன், சிற்பி, தேனரசன், பாலா, சிதம்பரநாதன், மீரா, அப்துல் ரகுமான். நா. காமரசன் ஜெயப்பிரகாசம் இனமுருகு கங்கைகொண்டான் ஆகியோரோடு கோவையில் கூடமைத்துப் பறக்கத் தொடங்கினார்கள் வானம்பாடிகள். தமிழ் கூறும் நல்லிலக்கியத்தின் நாற்றிசையிலும் பறந்து பார்க்கலாம் என்று வானம்பாடி, இதழ் வடிவம் பெற்று வானுக்கு எழுந்தது. எழுத்து பெற்ற வானம்பாடி, மனிதம்(மனிதநேயத்தைப்) பாடும் வானம்பாடி ஆயிற்று. அவற்றை இக்கட்டுரை மூலம் ஆராயப்படுகிறது.

**மனிதனைப் பாட வந்தோர்**

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்றார் ஔவையார். சந்திரனை வென்றது பார் மனித சக்தி என்பார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். பரந்த இப்பூமியில் ஆற்றல் மிகுந்த உயிரினம் மனித இனம், “மனிதனை விட நுட்பமான சிக்கான ஆர்வமூட்டக்கூடிய ஒரு பொருள் உலகத்தில் இல்லை. மனிதனே எல்லாம்” என்று மார்க்சிம் கார்க்கி கூறுவார். சமூகப் போராளியாக விளங்கிய தந்தை பெரியாரும் மனிதனை நினை என வலியுறுத்தி வந்தார். “மனிதம் மறைந்து பகுத்தறிவு குறைந்து அமையும் எவையும் எதிர்க்கப்படும்”(ஜெல, தந்தை ஈ.வே. ராமசாமி பெரியாரின் மத எதிர்ப்பு நிலைப்பாடு ப.206) என்பது ஆய்வாளர்கள் முடிவு.

தன்னுர்ச்சிப் பாக்களைப் பாடிக்கொண்டு கவிதையைப் புலம்பல்களின் புகலழடமாக மாற்றிக் கொண்டிருந்தனர். ஒரு சாரார் அவன் செயல் அவன் எழுதியதை அழித்து எழுத முடியுமா? என சக்குருவி. வேதாந்தம் பேசி மக்கள் மனதை முடமாக்கிக் கொண்டிருந்தன் ஒரு சிலர். நாட்காட்டியைப் பாத்ததுக் கொண்டு பொங்கலுக்கொன்று தீபாவளிக்கொன்று, விடுதலை நாளுக்கொன்று என அட்டவணை போட்டுப் பருவகாலப் பாக்களை எழுதிக் கவிதைக் களத்துமேட்டில் போரடித்துக் கொண்டிருந்தனர் சிலர். இத்தகைய நிலையே,

*“பண்என்பார் பாவம் என்பார் பண்புமார பென்றிடுவார்*
*கண்ணைச் சொருகிக் கவி என்பார் - அண்ணாந்து*
*கொட்டாவி விட்டதெல்லாம் கூறுதமிழ்ப் பாட்டாச்சே*
*முட்டாயே இன்னமுமா பாட்டு?”*

*(புதுமைப்பித்தன், புதுமைப்பித்தன் கவிதைகளும் நாடகங்களும், ப.48)*

என நையாண்டிக்குரல் ஒலிக்கப் புதுமைப்பித்தனும் பாடியுள்ளார்

இந்த நிலையில் தான்,

*”வைகறைப் போதுக்கு*
*வார்த்தைத் தவமிருக்கும்*
*வானம் பாடிகளே – ஓ*
*வானம் பாடிகளே*
*இந்தப் பூமி உருண்டையைப்*
*புரட்டிவிடக் கூடிய*
*நெம்புகோல் கவிதையை*
*உங்களில் யார் பாடப் போகிறீர்கள்?*
*ஓ என் தோழரே*
*ஒப்பற்ற*
*அந்த மனிதாபிமானக் கவிதையை*
*நம்மில் யார்பாடப் போகிறோம்?”*

*(மு.மேத்தா, கண்ணீர் பூக்கள், ப.21)*

என்று எழிச்சிக் கவியோடு எழுந்தார் மு.மேத்தா.

வானம்பாடிகளின் எழுதுகோல் சமுதாய வழக்கறிஞரின் வாதக்கோலாக உருமாறியது. இதுவரை தட்டிக் கேட்காமல் கிடந்த சமூகக் கொடுமைகளையும் அவலங்களையும் கண்டு மனம் நொந்து சுட்டுப் பொசுக்கும் பாக்கனலைக் கொட்டத் தொடங்கினார்கள் வானம்பாடிகள். “ நிகழ்காலத்தின் சத்தியங்களையும் வருங்காலத்தின் மகோன்ன தங்களையும் தரிசிப்பதற்காக, உண்மையும் உணர்ச்சியுமே இருசிறகாய்க் கொண்டு கவிதை வானத்தில் சஞ்சரிக்க முன் வந்த முற்போக்குக் கவிஞர்களே வானம்பாடிகள்”(வல்லிக்கண்ணன், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், ப.221) என்று வல்லிக்கண்ணன் திறனாய்ந்துரைக்கிறார்.

மனிதனைப் பாடவந்தவர்கள் மனிதயேத்தைப் படம்பிடித்தும், உடன்வாழ் மனிதர்களை மேல்கீழ் என்றும், செல்வர் ஏழை என்றும், பகுத்த இழி சமூகத்தைச் சாடியும் மக்களுக்கு எழுச்சியூட்டினர்.

*“எரிமலையின் உள்மனங்களாய்*
*அக்கினிக் காற்றில் இதழ்விரிக்கும்*
*அரும்புகளாய் திக்குகளின் புதல்வர்களாய்*
*தேசவரம்பற்றவர்களாய்*
*அஞ்சாத அமிலநதியின்*
*அலைப் பகடைகளாய்*
*பூமியின் பிரளயங்களாய்*
*காலத்தின் வசந்தங்களாய்*
*யுகத்தின் சுவடுகளாய்*
*நிறங்களில் சிவப்பாய்*
*மண்ணை வலம்வம் பறவைகளாய்*
*மானுடம் பாடிவரும் வானம்பாடிகளின்*
*விலையிலாக் கவிமடல்”*

*(வல்லிக்கண்ணன், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், ப.221)*

எனும் தன்னிலை விளக்க எழுச்சி கவிதையுடன் வானம்பாடி இதழும் வெளிவர தொடங்கியது.

**தமிழன்பனின் ஈரநெஞ்சம்**

“வாழ்வின் கடைசிச் சொட்டு வரை அதை நான் அருந்துவேன்” என்றார் ஆங்கிலப் பாவலன் டென்னிசன் (I will drink the life to the lees) மனிதனை மட்டுமே மையப்படுத்திப் பாடிப் பறந்த தமிழன்பன் “ எனது கவிதைகள் மனித வாழ்வின் அனைத்து அம்சங்களோடும் உதறிவிட முடியாத உறவு கொண்டவை” தமிழன்பன்(முன்னுரையில்) காலத்துக்கு ஒரு நாள் முந்தி, ப.3) எனப் பெருமிதத்தோடு குறிப்பிடுகிறார்.

அதுபோல வாழ்க்கையை வாழ்வாங்கு வாழாமல் பயனின்றிக் கழிப்பவர்மேலும் இப்பாவலருக்குச் சினம் வருகிறது.

*"வாழ்வை*
*அர்த்தப்படுத்தாத மனிதனை*
*எந்த*
*வார்த்தையும்*
*வருணிப்பதில்லை"*

*(தமிழன்பன், மின்மினிக்காடு, ப.20)*

என வெம்புகிறார்.

பிறப்பென்று வந்துவிட்டாலே இறப்பும் எழுதப்பட்ட நியதியாகி விடுகிறது. இறப்பதற்குமுன் இச்சமூகத்துக்கு அவன் பயன்பட வேண்டும். பல வேடிக்கை மனிதரைப் போல வீழ்வதில் எவருக்கும் எப்பயனும் விளைவதில்லை. மரணமும் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும்.

*"புள்*
*பறக்கும் போதே*
*இறக்க வேண்டும்*
*மனிதன்*
*வாழும் போதே*
*இறக்க வேண்டும்"*

*(தமிழன்பன், காலத்துக்கு ஒருநாள்*
*ஒருநாள் முந்தி, ப.27)*

என ஆதங்கப்படுகிறார் கவிஞர்.

மதிப்போடு வாழ வேண்டும் மனிதன். அனைவரையும் இச்சமூகம் சமநிலையில் வாழ விடுகிறதா? பொருளாதாரச் சமநிலை வரும் என்பது வண்ணமயமான கனவாகவே இத்தேசத்தில் வந்து மறைந்துவிடுகிறது.

*"பொருளாதாரம்*
*முன்னேறி இருக்கிறது*
*பொதுமக்கள்தான்*
*முன்னேறவில்லை"*

*(தமிழன்பன், காலத்துக்கு ஒருநாள்*
*ஒருநாள் முந்தி, ப.20)*

என்பவை வேதனையில் வெடித்த விகடவரிகள்.

கவிஞர் தமிழன்பனின் மனிதநேய மன் மானுட விடுதலைக்காகத் துடிப்பதை அவருடைய கவிதைகள் வாயிலாக அறியலாம்.

**நா. காமராசன் கவிதைகளில் மானித நேயம்**

"புழுதிக் கட்டில்களாக மாறி எவருடைய ஏழைத் தோழர்களை உறங்க வைக்கும் கோடானுகோடி நடைபாதைகளுக்குக் காணிக்கையா" (கறுப்புமலர்கள் நா. காமராசன் காணிக்கை ப.X) "கறுப்புமலர்கள்" கவிதைகளை மலரச் செய்த நா.காமராசன், மரபுக்கவிதைப் பாட்டைவழி நடந்து புதுக்கவிதையினை மணிமுடியைத் தொட்ட பாவலர். நா.காமராசனின் பெரும்பான்மைப் பாடல்கள் ஏழைகளின் பட்டினித்துயர் போக்க எழுந்துவையாக இருக்கின்றன.

கற்புநிலை பற்றிப் பேசவந்தால் இருபாலருக்கும் ஒரே நெறி என்பதை இந்தச் சமூகம் மறந்துவிட்டுப் பெண்களையே பழிக்கின்றது. பொருட்பெண்டிர் பற்றி வள்ளுவர் பாடியுள்ளார் அவர்களுக்காக இரங்கி,

*"எங்களுடைய நீதிமன்றத்தில் தான்*
*ஒழுக்கம் துண்டிக்கப்படுகிறது*
*...........*
*நாங்கள் நிர்வாணத்தை விற்பனை செய்கிறோம்*
*ஆடைகள் வாங்குவதற்காக*
*......................*
*நாங்கள் அடிமைகள்*
*அதனால் தான்*
*எங்கள் சாம்ராஜ்யத்தில்*
*சூரியன் உதிப்பதுமில்லை*
*அஸ்தமிப்பதுமில்லை"*

*(கறுப்புமலர்கள் நா. காமராசன்,*
*ப. 84 – 86)*

என்று பாடுகிறார்.

**சிற்பியின் மானுட நேயம்**

பாரதியின் பாரதிதாசன், கம்பன் ஆகியோரால் ஆட்கொள்ளப்பட்ட கவிஞர் சிற்பி ஆவாரர். அழகியலும் நடப்பியலும் கைகோர்த்து வரும் எழுச்சிக் கவிதை அவருடையன. தன்னுடைய கவிதைக் கோட்பாடுகளாக,

*"நேரே நில் நிமிர்ந்துயார்*
*நெஞ்சில் பட்டதை*
*வளமாய்ச் சொல்"*

"இதுதான் என் கவிதைக் கோட்பாடு. இன்னும் விளக்கமாகச் சொல்வதாயின் இக்கால மனிதனின் சிக்கல்களைப் புரிந்து கொள்வதற்கான இடையறாத முயற்சியே என் கவிதை. மனிதனையும் மண்ணுலக வாழ்க்கையையும் தொடாத எதுவும் இலக்கியமாக முடியாது " (சிற்பி, மௌன மயக்கங்கள், ப.55) எனச் சிற்பி குறிப்பிடுகிறார்.

கடையனுக்கும் கடைத்தேற்றம் வேண்டியே எல்லாச் சமூகப் போராளிகளும் போராடுகிறார்கள். மானுடநேயம் ததும்பும் பாக்களால் போராடுகிறான் கவிஞர்.

*"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேரா தியல்வது நாடு"*

*(திருவள்ளுவர். திருக்குறள்,*
*குறள் எண் 734)*

என்பார் வள்ளுவர். அது போலவே சிற்பியும்,

*"திரும்பத் திரும்ப நான்*
*பார்க்கவும் கேட்கவும்*
*அறவே விரும்பாத*
*அவையும் இரண்டு*
*ஒன்று*
*என் வளநாட்டின்*
*தீரா வறுமை*
*இன்னொன்று*
*உன் தரிசனம் பெறாத*
*வாழ்வின் வெறுமை*

*(சிற்பி, மௌன மயக்கங்கள், ப.55)*

எனத் தன் இலக்கைப் பதிவு செய்தவர் தன்னம்பிக்கை மீதுர,

*"உலகத்தின்*
*எல்லாச் சுகங்களும்*
*இனி ஏழைகளுக்கே*
*சமர்ப்பணமாகப் போகின்றன"*

*(சிற்பி, மௌன மயக்கங்கள், ப.55)*

என உறுதியுடன் பாடுகிறார்.

மானுடத் தொடர்ச்சி,

*"மானுட சந்ததி மறையாத சந்ததி*
*நான் தனிவாழை அல்ல*
*வாழியடி வாழி"*

*(மு.மேத்தா, கண்ணீர்ப்பூக்கள், ப.105 )*

என மேத்தாவின் வாழைமரம் சபதம் ஏற்கும் குரலின் மானுடநேயம் கொண்டு போராடும் ஒரு சமுதாயப் போராளியின் உணர்வின் எதிரொலி கேட்கிறது.

மனிதனின் கண்டுபிடிப்பே மனிதனை அழிக்கும் என்றால் "விஞ்ஞான தேவதையின் கைகளில் விலங்கு மாட்டுவோம்" (மு. மேத்தா, ஒற்றைத் தீக்குச்சி, ப.33) என்ற கவிஞரின் குரல் அழிவுக்காக அறிவியலைப் பயன்படுத்தக் கூடாது என்ற ஆணையாக வருகிறது. "கண்ணீர் சிந்தாத உலகத்தை எனக்குக் காட்டுங்கள் யாரேனும்" (மு. மேத்தா, ஒற்றைத் தீக்குச்சி, ப.33 ) என மேத்தா கேட்பது நம் பொருளியலார்க்கும் அரசாள்வோருக்கும் விடுவிக்கும் அறைகூவலாக இருக்கிறது.

விடுதலையான வாழ்வும், விடுதலையான நாடும், விடுதலையான உணர்வும் தான் மனித மதிப்புகளைக் கட்டிக் காக்கும். அடிமை உணர்வுள்ள மக்கள் விழிப்புணர்வு பெறாவிட்டால் அவர் வாழும் பூமியே அவமானச் சின்னமாகி விடுகிறது என்பதை,

*"எந்த இடத்தில்*
*சுதந்திரம் இல்லையோ*
*அந்த இடத்தில்*
*பூமி*
*நிர்வாணத்தால் அவமதிக்கப்படுகிறது*

*(மு.மேத்தா, கண்ணீர்ப்பூக்கள், ப.86)*

எனக் கூறும் கவிஞர், பூமியின் அடையே சுதந்திரம் என்பதை வலியுறுத்துகிறார்.

**அப்துல்ரகுமான் கவிதைகளில் மனித நேயம்**

புதுக் கவிதைப் புவியதிர்வு மையம் கொண்டிருந்த இன்னோர் இடம் வாணியம்பாடி. தானும் பமர்ந்து தன் கிளைகளையும் படரப் பயிற்றுவித்துப் புதுப்புது எண்ணத் திரட்டுகளைக் கவிதையுலகுக்கு வழங்கியதில் அப்துல் ரகுமானுக்கு இணை அவரே. இந்த மானுடம் இன்னும் உண்மை விடுதலையைக் காணவில்லையே, உழைப்பவர் நிலை உயரவில்லையே, நீதிதேவனும் மயங்கி நிற்கின்றானே, மதவெறியால் மனிதர்கள் பிளவுபடுகிறார்களே என்ற துயரம் அவருடைய பாக்களில் காணக்கிடக்கின்றன.

*"நல்லதொரு சமுதாயம்*
*நாம் காண வேண்டும்*
*……*
*அந்தச் சமுதாயத்தில்*
*ஆறாக வீதியிலே*
*பாலும் தெளிதேனும்*
*பாய்ந்தோட வேண்டாம்*
*இரத்தம் ஓடாது*
*இருந்தால் அதுபோதும்"*

*(அப்துல்ரகுமான், நேயர்விருப்பம், ப. 81)*

என மனிதகுலம் சமநிலைக்கு வரவேண்டும் என்ற விழைவைப் புலப்படுத்துகிறார்.

**மீராவின் கவிதைகளில் மனிதநேயம்**

சமுதாயத்தையே சிந்தித்துக் கொண்டிருக்கும் கவிஞர்களுக்கு அழகியல் நோக்கும், காதல் எண்ணமும் இருக்காதா என்று வினா எழுவது இயல்பே. காதலைப் பாடும்போது கூட முற்போக்குச் சிந்தனையும் மனிதநேயமும் முகிழ்க்கிறது மீராவின் பாடல்களில்.

"இதில் காதல் என்பதை இருந்தாலும் அதை வெறும் மானுடக் காதலாகச் சொல்லாமல் ஓர் ஆன்மீகப் பரிணாமம் தந்திருக்கிறேன். பெண்ணை வெறும் பெண்ணாக அல்லாமல் ஓர் இலட்சிய சமூக அமைப்பின் பரிபூணத்தின் குறியீடாகக் கையாண்டிருக்கிறேன்.

*"உலகப்பன் பாட்டைப் படித்துவிட்டு*
*நிலத்தை மீட்கப் போனேன்*
*என்று என்னைக் கைது செய்தவர்கள்*
*என் புரட்சி வாய்ந்த*
*மனத்தைப் பறித்துப் போகிறாயே*
*இந்த நாட்டுச் சட்டம்*
*உனக்குச் சாதகமாகத் தானே இருக்கிறது"*

*(கனவுகள்+கற்பனைகள்= காகிதங்கள்)*

என்று நிகழ்வின் குறியீடாகவும் கையாண்டிருக்கிநேன்" ப.134 என மீரா குறிப்பிடுகிறார்.

**முடியரசன் கவிதைகளில் மனித நேயம்**

வானம்பாடிக் கவிஞருள் மூத்த கவிஞர் முடியரசன் ஆவார். இவருடைய கவிதைகள் பெரும்பான்மை மரபுப் பாடல்களாகவே இருப்பதைக் காண்கிறோம். ஆனால், சமூக அவலங்களைச் சாடி மனிதநேய மனத்தோடு கூடிச் சந்தத்தோடு வந்து சிந்திக்க வைப்பன இவருடைய கவிதைகள்.

மனிதனுக்கு துன்பத்துக்கும் வறுமைக்கும் காரணம் தலைமேல் அயன் கையெழுத்தென்றும் எல்லாம் அவன் செயல் என்றும் மூடநம்பிக்கைப் பற்று விடாது நம்பும் பாமரரைப் பார்த்து.

*"நான்முகன் உன்மண்டை ஓட்டில் - ஏதோ*
*நாட்டினன் என்பதை நெஞ்சில்விட் டோட்டில்*
*ஏன்வறு மைத்துயர் நாட்டில் - தம்பி*
*ஏறுமுன் னேறுழைப் பாலுயர் கோட்டில்"*

*(முடியரசன் பாடுங்குயில் ப.57)*

என அறிவுறுத்துகிறார் முடியரசன்.

உழுபவன் நிலையை எவரும் எண்ணிப் பார்ப்பதில்லை. உழவுத் தொழில் நின்றுவிட்டால் உலகமே இருண்டுவிடும் எனக் கவிஞர் முடியரசன் எச்சரிக்கிறார்.

*"முழுமதி வடிவினில் குறையும் - அதுவும்*
*முழுமையும் ஒருநள் மறையும்*
*உழுபவன் வரவினில் குறையின் - என்றன்*
*உளமோ கனவாய்ப் புகையும்"*

*(முடியரசன் பாடுங்குயில் ப.11)*

என்று உழவனுக்காக வேகும் தன் நெஞ்சை விரித்துக் காட்டுகிறார்.

**முடிவுரை**

நாட்டிற்கு விடுதலை கிடைத்த பின்பும் இந்தியாவில் வறுமை ஒழிந்தபாடில்லை. உழைப்பவர்கள் சுரண்டப்பட்டுக் கொண்ட இருக்கிறார்கள். மனிதனை மனிதனே விடுதலை செய்யவேண்டும். மானுடம் வெல்ல வேண்டும் முதலிய கருத்துக்களைக் வானம்பாடி கவிஞர்களாகிய தமிழனபன், நா. காமராசன், சிற்பி, மு. மேத்தா, அப்துல்ரகுமான், மீரா, முடியரசன் மேலும் பலர் வெளிப்படுத்துகிறார்கள்.

மரபை முற்றும் துறந்து புதுக்கவிதை வாயெடுத்து வீசத் தொடங்கினர் வானம்பாடிகள் இவர்கள் படிமங்களும் முரண்களும் நிறைந்த பாக்களால் தமிழ்க்கவியுலகை வண்ணமயமாகச் செய்தனர். சூரியனுக்கே அறைகூவல் விடுத்து இருட்டையும், இருட்டான செயல்களையும் கவிதை மூலம் சுட்டெரித்தனர். ஒவ்வொரு சொல்லும் உலைக்களப் பொறியாக விழுந்து, சமுதாயப் போராட்டக் களத்தில் குதிக்காமல் சாகசக் கவிதைகள் பாடினால், இந்தச் சமுதாயம் எளிதாக எங்களை ஏற்காது என்பதைக் காலம் சரியாகத்தான் காலம் கணித்தது. சூரியனின் கீழ் உள்ள அனைத்துப் பொருட்களும் பாடுபொருட்களும் பாடுபொருட்களாயின. உடுக்களும் கோள்களும் உயிர் பெற்றுக் கவிக் கோலத்துக்குள் கண் சிமிட்டின. நாட்டில் கிடைக்கும் அவலங்களை, அழியாப் பாமாலையாக புனைந்தனர் நம்மவர்கள். சின்னக் கொசு கூட நம் புதுக்கவிஞனுக்குப் பாடுபொருள்தான். அக உணர்வுகள் காவியம் ஆயின.

சிலிர்த்து எழுத்து சிங்கமாய்த் தலை நிமிர்ந்து நிற்கிறது தற்காலப் புதுக்கவிதை உலகம். இருண்மைக் கவிதைகள் எண்ணிலடற்காமல் வந்தாலும், நடப்பியல் சார்ந்த கவிதைகயே வாழ்வுக்கும்சரி இலக்கியத்துக்கும் சரி நலம் சேர்க்கும் என்பது உறுதியாகிறது. வடிவம் பற்றிக் கவலைப்படாமல் வந்தாலும், முரண்சுவை பொதிந்துவரும் தற்காலப் புதுக்கவிதைகளில் மனிதம் ஊற்றெடுத்து உவக்கிறது என்பதை உறுதியாகச் சொல்லலாம். நீதிக்கும் நயன்மைக்கும் குரல் கொடுத்த வானம்பாடிக் கவிஞர்களால் தமிழ் இலக்கிய உலகம் புதுப்பொலிவும் வேகமும் பெற்றது மறுக்க முடியாது.

**துணைநூல் பட்டியல்**

1. அப்துல்ரகுமான்,நேயர்விருப்பம், அன்னம் வெளியீடு, சிவகங்கை, 5 ஆம் பதிப்பு, ஆக.1989
2. ஈரோடு தமிழன்பன், காலத்துக்கு ஒரு நாள் முந்தி, பூம்புகார் பிரசுரம், 63 பிராட்வே, சென்னை – 1,1982
3. காமராசன், நா., கருப்புமலர்கள், திருமகள் நிலையம், தி. நகர், சென்னை- 17, 1995
4. மீரா, மூன்றும் ஆறும், செல்லமா சிவன் கோயில் தெற்கு வீதி, சிவகங்கை- 630 561, 1967
5. முடியரசன், பாடுங்குயில், செல்லமா சிவன் கோயில் தெற்கு வீதி, சிவகங்கை 630 561, 1983
6. மேத்தா, மு., கண்ணீர்ப்பூக்கள், குமரன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தி. நகர், சென்னை- 17, 1974